# கிறிஸ்துவின் மணவாட்டி!




அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதபாடங்கள்

23



கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக ஒரே சரீரம் அல்லது சபை இருக்கிறதாகவும், இயேசு தமது கடைசிகால மக்களை அதற்குள் அழைப்பதாகவும் வேதாகமம் சொல்லுகிறது. கிறிஸ்தவர்களாகத் தங்களை அழைத்துக்கொள்ளுகிற ஆயிரக்கணக்கான சபைகள் இருக்கிறபடியினால் இப்படிச் சொல்லுவது சிலருக்கு திகைப்பூட்டுவதாக இருக்கும். கிட்டத்தட்ட ஒவ்வொரு சபையுமே தேவனுடைய சபையாகத்தான் தன்னை உரிமைபாராட்டுகிறது. எனினும் வேதாகமத்தை விளக்குவதிலும், விசுவாசத்திலும், பழக்கங்களிலும் அவர்கள் மிகவும் வேறுபடுகிறார்கள். ஒவ்வொருவருடைய உரிமையையும் ஆராய்ந்துபார்ப்பது உண்மையாகவே சத்தியத்தைத் தேடுகிறவருக்குக் கூடாதகாரியம். எனினும் நீங்கள் எளிதாக அடையாளம் காண்பதற்கேதுவாக இயேசு தமது சபையைக்குறித்த விவரங்களைக் கொடுத்து நமது பிரச்சனையை தீர்த்துவைத்திருப்பதினால், நாம் அவருக்கு நன்றி சொல்லவேண்டும். தெளிவாகவும் பலமாகவும் இருக்கிற இந்த வர்ணனை வெளி. 12லும் 14லும் காணப்படுகிறது. கடைசி காலங்களில் உதவக்கூடிய ஆச்சரியமான சத்தியங்களினால் இது உங்களை பரவசப்படுத்தும். மாற்றும் சத்தியங்களைக் கண்டுபிடிக்கும் முன்பாக வெளி. 12:1–17வரை இருக்கும் வசனங்களை ஒருமுறை வாசியுங்கள்.



## 1 எவ்விதமான தீர்க்கதரிசன அடையாளங்களைக்கொண்டு இயேசு தமது மெய்யான சபையை எடுத்துக்காட்டுகிறார்?

**“செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியை”–எரேமியா 6:2; “சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக”– ஏசாயா 51:16.**

**பதில்:** கிறிஸ்து தமது மெய்யான தூய்மையான சபையை (சீயோனை) தூய்மையான பெண்ணாகவும், துரோகம் செய்த சபையை வேசியாகவும் அடையாளப்படுத்துவதை பாடம் 22ல் நாம் படித்தோம். இதே அடையாளங்களை 2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:22,23 மற்றும் வெளி. 19:7,8 வசனங்களும் உபயோகப்படுத்துகின்றன.

## 2 வெளி. 12:1ல் இயேசு தமது சபையை "சூரியனை அணிந்து" "காலின் கீழ் சந்திரனையும்" சிரசில் "பன்னிரண்டு நட்சத்திரங்கள்கொண்ட கிரீடத்தையும்" வைத்திருக்கிற பெண்ணாக அடையாளப்படுத்துகிறாரே, இந்த அடையாளங்களின் பொருள் என்ன?



**பதில்:** அ. சூரியன் இயேசுவையும், அவருடைய சுவிசேஷத்தையும், நீதியையும் காட்டுகின்றது. "தேவனாகிய கர்த்தர் சூரியனும்"–
சங். 84:11 (மல். 4:2). இயேசு இன்றி இரட்சிப்பு இல்லை (அப். 4:12). மற்ற அனைத்தையும் விட தமது சபை தமது சமூகத்தினாலும் மகிமையினாலும் நிரம்பியிருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

ஆ. "காலின் கீழ் சந்திரன்," பழைய ஏற்பாட்டின் பலி அமைப்பை எடுத்துக்காட்டியது. சந்திரன் எவ்விதம் சூரியனின் வெளிச்சத்தைப் பிரதிபலிக்கிறதோ, அவ்விதமே பலிமுறைகள்கொண்ட அமைப்பு வரவிருந்த மேசியாவைக்குறித்த வெளிச்சத்தை பிரதிபலித்தபோது ஆவிக்குரிய விதத்தில் உதவியாயிருந்தது (எபி. 10:1).

இ. "பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடம்," புதிய ஏற்பாட்டு சபையின் ஆதிகாலத்தில் கிரீடமாக இருந்த பன்னிரண்டு அப்போஸ்தலரின் ஊழியத்தை எடுத்துக்காட்டியது.

## 3 அடுத்ததாக, இந்த பெண் பிரசவவேதனைப்பட்டு, எதிர்காலத்தில் அனைத்து ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் குழந்தையைப் பெற்றெடுக்க இருந்ததாகவும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறது. பின்னர் அவள் அந்த "ஆண்பிள்ளையை" பெற்றெடுத்ததாகவும், அந்த "ஆண்பிள்ளை" பரலோகத்திற்கு தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் அது கூறுகிறதே (வெளி. 12:1,2,5) இந்த குழந்தை யார்?

**பதில்:** அந்த குழந்தை இயேசுவே. ஒருநாள் அவர் அனைத்து மக்களையும் இருப்புக்கோலால் ஆட்சிசெய்வார் (வெளி. 19:13–16; சங். 2:7–9, யோவான் 1:1-3,14). நமக்காக சிலுவையில் அறையப்பட்ட இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறினார் (அப். 1:9–11). நமது வாழ்க்கையிலிருக்கும் அவருடைய உயிர்த்தெழும் வல்லமை கிறிஸ்து தமது சபைக்குக் கொடுக்கிற அத்தியாவசிய ஈவுகளில் ஒன்று (பிலி. 3:10).



## 4 வெளி. 12:3,4, அந்த “ஆண்பிள்ளையை” வெறுத்து பிறப்பிலேயே அதைக் கொல்ல முயற்சித்த “சிவப்பான பெரிய வலுசர்ப்பத்தை” அறிமுகப்படுத்துகிறது. இந்த வலுசர்ப்பத்தை பாடம் 20ல் படித்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த வலுசர்ப்பம் யார்?

**பதில்:** வானத்திலிருந்து தள்ளப்பட்ட சாத்தானையே இந்த வலுசர்ப்பம் எடுத்துக்காட்டுகிறது (வெளி. 12:7–9). அவன் இயேசு பிறந்தபோது அஞ்ஞான ரோமின்வழியாக வேலை செய்தான். அஞ்ஞான ரோமின்கீழ் இருந்த ஏரோது அரசன், பெத்லகேமிலிருந்த அனைத்து ஆண்பிள்ளைகளையும்—இயேசு அவர்களில் ஒருவராயிருப்பார் என்று நம்பி—கொலைசெய்ததினால் இயேசுவை பிறப்பிலேயே கொலைசெய்ய முயற்சித்தான் (மத்தேயு 2:16).



## 5 வலுசர்ப்பத்தினுடைய “ஏழு தலைகளும்” “பத்து கொம்புகளும்” “வானத்து நட்சத்திரங்களில் மூன்றில் ஒருபங்கு பூமிக்குத் தள்ளப்படுவதும்” என்ன பொருள்படுகின்றன?

**பதில்:** அ. ஏழு தலைகளும் ரோம் அமைந்திருக்கிற ஏழு மலைகளை எடுத்துக்காட்டுகிறது (வெளி. 17:9,10). இதுவரையிலும் ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையுமுடைய மிருகத்தை நம் பாடவரிசையில் மூன்றுமுறை நாம் சந்தித்துவிட்டோம். (வெளி. 12:3; 13:1; 17:3).

ஆ. பத்துக் கொம்புகள், தேவனுடைய மக்களையும் அவருடைய சபையையும் ஒடுக்கிய மிகப்பெரிய வல்லமைக்கு ஆதரவளிக்கிற அரசாங்கங்களை அல்லது நாடுகளை எடுத்துக்காட்டுகின்றன. அஞ்ஞான ரோமின் பதவிகாலத்தில் (வெளி. 12:3, 4), போப்பு மார்க்கத்திற்கு ஆதரவளித்து முடிவாக ரோம சாம்ராஜ்யத்தை உடைத்த (தானியேல் 7:23, 24) பத்து பார்பேரியன் கோத்திரங்களை அவைகள் எடுத்துக்காட்டின. இந்த கோத்திரங்கள் பின்னர் நவீன ஐரோப்பாவாக உருவாயின. கடைசி நாட்களில் அவைகள் தேவனுக்கு எதிரான யுத்தத்தில் “மகா பாபிலோனுக்கு” ஆதரவளிக்கிற முடிவுகால கூட்டணியில் (வெளி. 16:14; 17:12, 13, 16) இணைந்துகொள்ளும் அனைத்து உலக நாடுகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

இ. “வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒருபங்கு நட்சத்திரங்கள்,” பரலோகத்தில் லூசிபருடைய கலகத்திற்கு ஆதரவளித்து பின்னர் அவனோடுகூட வெளியே தள்ளப்பட்ட தூதர்களை எடுத்துக்காட்டுகிறது (வெளி. 12:9; லூக்கா 10:18; ஏசாயா 14:12).

### திருப்பிப்பார்க்குதலும் சுருக்கமும்

இதுவரையிலும் கீழ்கண்ட வேதாகம உண்மைகளை தீர்க்கதரிசனம் அறிவித்திருக்கிறது.

அ. தேவனுடைய மெய்யான சபை தோன்றுகிறது; தூய்மையான பெண்ணாக காட்டப்படுகிறது.

ஆ. இயேசு சபையில் பிறக்கிறார்.

இ. சாத்தான் அஞ்ஞான ரோமின் ஏரோது இராஜாவின் வழியாக செயல்பட்டு குழந்தை இயேசுவை கொல்ல முயற்சிக்கிறான்.

ஈ. சாத்தானுடைய திட்டம் தோல்வியடைகிறது.

உ. இயேசுவின் பரமேறுதல் காட்டப்பட்டிருக்கிறது.



## 6 குழந்தை இயேசுவை கொல்லும் திட்டத்தில் தோல்வியடைந்த சாத்தான் அதற்குப்பின் என்ன செய்தான்?

**“அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது”–வெளி. 12:13.**




**பதில்:** அவனால் இயேசுவை தனிப்பட்டவிதத்தில் தாக்கமுடியாததால், தனது உக்கிரத்தையும் உபத்திரவத்தையும் தேவனுடைய சபைமீதும் அவருடைய மக்கள்மீதும் அவன் காண்பித்தான்.

### ஆறு அடையாளம் காணும் குறிப்புகள்

வெளி. 12 மற்றும் 14ல், இயேசு தமது கடைசிகால சபையை அடையாளம்கான ஆறு குறிப்புகளைக் கொடுக்கிறார். இந்த வேதபாடத்தின் மீதிபகுதியைப் படிக்கும்போது அவைகளை கவனித்துப்படியுங்கள்.

## 7 தன்னைக் காத்துக்கொள்ளும்படி அந்தப் பெண் (சபை) செய்தது என்ன? “வனாந்தரம்” என்றால் என்ன? வெளி. 12:6,14ல் சொல்லப்பட்டிருக்கிற வனாந்தரம் என்ன?

**பதில்:** அ. வசனம் 6 மற்றும் 14 சொல்லுகிறது. “ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்;” அங்கே அவள், “ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாக” (அல்லது 1260 வருடங்கள்) கத்தோலிக்க ரோமின் வழியாக கிரியை செய்த சாத்தானின் கோபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டாள். “இரண்டு சிறகுகளும்” சபை “வனாந்தரத்தில்” இருந்த காலத்தில் தேவன் அவளுக்குக் கொடுத்த பாதுகாப்பையும் ஆதரவையும் எடுத்துக்காட்டுகிறது (யாத்திராகமம் 19:4; உபாகமம் 32:11). வனாந்தரத்திலிருந்த 1260 வருட காலம், இயேசு தீர்க்கதரிசனத்தில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட போப்புமார்க்கத்தின் ஆட்சியும் உபத்திரவமும் இருந்த காலமே (கி.பி.538–1798).

ஒரு தீர்க்கதரிசன நாள் ஒரு வருடத்திற்குச் சமம் (எசேக்கியேல் 4:6).

**ஆ.** பதுங்கியிருந்து, முற்றிலும் அழிக்கப்படுவதிலிருந்து (எபிரெயர் 11:37,38) தப்பிப்பதற்கு தேவனுடைய மக்களுக்கு சாதகமாயிருந்த தனிமையான இடங்களையே (மலைகள், குகைகள், காடுகள்) வனாந்தரம் குறிப்பிடுகிறது. வான்டென்சியர்கள், அல்பிஜென்சஸ், ஹுகிநாட்ஸ் போன்ற இன்னும் அநேகர் அவ்விதம் ஒளிந்திருந்தனர். பேரழிவுண்டாக்கின போப்புமார்க்கத்தின் உபத்திரவகாலத்தில் தேவனுடைய மக்கள் (அவருடைய சபை) இவ்விதம் வனாந்தரத்தில் ஓடி ஒளிந்திருக்கவில்லையெனில் முற்றிலும் அழிக்கப்பட்டிருப்பார்கள். (1540ல் “இயேசுவின் சபை” (ஜெசுவைட்) துவங்கினதிலிருந்து 1580வரையிலான 40 வருட காலத்தில், 9,00,000பேர் அழிக்கப்பட்டனர். விசாரணை என்னும் பெயரில் 1,50,000பேர் 30 வருடங்களில் அழிந்தனர்.”[1]) 1260 வருட காலத்தில் குறைந்தது 5 கோடி மக்கள் தங்கள் விசுவாசத்திற்காக மரித்தனர். கி.பி.538லிருந்து 1798வரை இந்த 1260 வருட காலத்தில் தேவனுடைய சபை உயிரோடு இருந்தும் ஒரு ஸ்தாபனமாக அடையாளம் காட்டப்படவில்லை. கி.பி.538ல் வனாந்தரத்திற்குள் நுழைந்தபோது கொண்டிருந்த அப்போஸ்தல சபையின் அதே போதனைகளோடும் குணங்களோடும் 1260 வருடங்களுக்குப்பிறகு அவள் வெளியே வந்தாள்.



*வெளி. 12:6ல் இருக்கும் 1260 நாட்கள், வேதாகம தீர்க்கதரிசனங்களில் பலவேளைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 1260 வருட போப்புமார்க்கத்தின் ஆட்சி காலத்தைக் குறிக்கிறது.*



*தேவனுடைய மக்களுக்கு உண்டான பயங்கரமான உபத்திரவத்திற்குத் தப்பும்படி அநேகர் அமெரிக்காவிற்கு ஓடினர்.*

***குறிப்பு: இயேசுவின் கடைசிகால சபையைக் குறித்த இரண்டு குறிப்படையாளங்களைக் நாம் கண்டுபிடித்தோம்.***

1. கி.பி.538லிருந்து 1798வரையிலும் அது அதிகாரப்பூர்வமான அமைப்பாக இருக்காது.
2. 1798க்குப்பிறகு எழும்பி, தன்னுடைய கடைசிகால ஊழியத்தை அது செய்யும்.

1798க்குமுன் இருந்த அதிகாரப்பூர்வ சபைகளில் அநேக அன்பான மெய்யான கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். எனினும் அந்த சபைகளில் எதுவும் இயேசு தமது மக்களை வந்துசேரும்படி அழைக்கிற கடைசிகால சபையாக இருக்கமுடியாது. ஏனெனில் இயேசுவின் கடைசிகால சபை 1798க்குப்பின்னதாக எழும்பவேண்டும். அதாவது, மிகவும் பிரபலமான புரொட்டஸ்டண்டு சபைகள் கடைசிகால சபையாக இருக்கமுடியாது. ஏனெனில் அவைகள் 1798க்குமுன்பாகவே அதிகாரப்பூர்வ சபைகளாக இருந்தன.

[1] Albert Barnes, *Notes on Daniel*, comment on Daniel 7:25, p. 328.

## 8 வெளி. 12:17ல் தேவன் தமது கடைசிகால சபையை “அவளுடைய சந்ததியான மற்றவர்கள்” என்கிறார். “மீதமானவர்கள்” (“மற்றவர்கள்” என்றவார்த்தை மூலமொழியில் “மீதமானவர்கள்” என்று பொருள்படுகிறது) என்றால் என்ன பொருள்?

**பதில்:** மீந்திருக்கிற பகுதி என்று பொருள். இயேசுவின் சபையை குறிப்பிடும்போது, அப்போஸ்தல சபையின் வேதபோதனைகளையே கொண்டிருக்கும் அவருடைய கடைசிகால சபையை அது குறிப்பிடுகிறது.



*“மீந்திருக்கும் துணி,” துண்டிக்கப்பட்ட நீண்ட துணியின் கடைசி பகுதி. அது முதல் துண்டைப்போலவே இருக்கும்.*

## 9 வெளி. 12:17ல் தமது கடைசிகால மீதமான சபையை விவரிக்க இயேசு வேறு என்ன இரண்டு குறிப்புகளைக் கொடுக்கிறார்?

**பதில்:** அது நான்காம் கற்பனையான ஏழாம்நாள் ஓய்வுநாள் கற்பனை உட்பட தேவனுடைய அனைத்து கற்பனைகளையும் கைக்கொள்ளும் (யோவான் 14:15; வெளி. 22:14). அது "இயேசுகிறிஸ்துவைக்குறித்த சாட்சியைப்" பெற்றிருக்கும். இயேசுவைக் குறித்த சாட்சி தீர்க்கதரிசன ஆவி என்று வேதாகமம் சொல்லுகிறது (வெளி. 19:10). (தீர்க்கதரிசன வரத்தைக் குறித்த முழுமையான விளக்கத்தை பாடம் 24 கொடுக்கும்).

***இயேசுவினுடைய கடைசிகால மீதமான சபையை அடையாளப்படுத்துகிற அடுத்த இரண்டு குறிப்புகள் இங்கே இருக்கின்றன.***

3. ஏழாம்நாள் ஓய்வுநாள் உட்பட தேவனுடைய அனைத்து கற்பனைகளையும் அது கைக்கொள்ளும்.
4. அது தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருக்கும்.

ஓய்வுநாளை கைக்கொள்ளாமலும் தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிராமலும் இருக்கிற சபைகளில் அநேக மெய்கிறிஸ்தவர்கள் காணப்படுகிறார்கள் என்பதை நினைவுகூருங்கள். இந்த சபைகளில் எதுவும் இயேசு கடைசிகால கிறிஸ்தவர்களை வரும்படியாக அழைக்கிற தேவனுடைய மீதமான கடைசிகால சபையாக இருக்கமுயாது. ஏனெனில் தேவனுடைய கடைசிகால சபை தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு தீர்க்கதரிசன வரத்தையும் பெற்றிருக்கும்.




## 10 தேவனுடைய மீதமான மக்களைக்குறித்த என்ன இரண்டு முடிவான குறிப்புகளை வெளிப்படுத்தல் புத்தகம் கொடுக்கிறது?

**பதில்:** ஆறு குறிப்புகளில் கடைசி இரண்டு குறிப்புகள்:

5. உலகளாவிய ஊழியம் செய்கிற சபையாக இது இருக்கும் (வெளி. 14:6), மற்றும்
6. கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெளி. 14:6–14 வரையிலான மூத்தூதின் செய்திகளை இது உபதேசிக்கும்.

அ. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடந்து கொண்டிருக்கிறது; அவரை தொழுது கொள்ளுங்கள்! நியாயத்தீர்ப்பு 1844ல் துவங்கியது என்று போதித்து, (பாடம் 18,19), "வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்" (வெளி.14:7) என்று தேவனுடைய கடைசிகால சபை மக்களை அழைக்கும்! நாம் எவ்விதம் தேவனை சிருஷ்டிகராகத் தொழுது கொள்ளுகிறோம்? பதிலை, "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;" "கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத். 20:8,11) என்கிற நான்காம் கற்பனையில் தேவன் எழுதினார். சிருஷ்டிப்பின் நினைவுச்சின்னமாக தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற



அவருடைய பரிசுத்த ஏழாம்நாள் ஓய்வுநாளை கைக்கொள்ளுவதினால் தேவனை சிருஷ்டிகரென்று தொழும்படி முதல் தூதனின் தூது அனைவருக்கும் கட்டளையிடுகிறது.

ஆ. விழுந்துபோன பாபிலோனின் சபைகளிலிருந்து வெளியே வரும்படி அழைக்கிறது.

இ. மிருகத்தை வணங்க வேண்டாம்; ஞாயிற்றுக் கிழமையை பரிசுத்தநாள் என்று சொல்லுகிற அதன் முத்திரையை பெற்றுக்கொள்ள வேண்டாம் என்கிறது. அனைத்து போலிகளையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**தமது கடைசிகால மீதமான சபையை அடையாளம் காணும்படியாக தேவன் கொடுத்திருக்கிற ஆறு குறிப்புகளையும் திருப்பிப்பார்ப்போம்.**

1. கி.பி.538லிருந்து 1798வரையிலும் அது அதிகாரப்பூர்வமான அமைப்பாக இருக்காது.
2. 1798க்குப்பிறகு எழும்பி, தன்னுடைய ஊழியத்தை அது செய்யும்.
3. ஏழாம்நாள் ஓய்வுநாள் உட்பட தேவனுடைய அனைத்து கற்பனைகளையும் அது கைக்கொள்ளும்.
4. அது தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருக்கும்.
5. தேவனுடைய கடைசிகால சபை உலகளாவிய ஊழியம் செய்கிற சபையாக இருக்கும்.
6. அது வெளி. 14:6–14வரை வரும் முத்தூதின் செய்தியை போதித்துக்கொண்டிருக்கும்.

## 11 கடைசிகால மீதமான சபையைக்குறித்த இயேசுவின் ஆறு அடையாள குறிப்புகளையும் நாம் பார்த்தோம். இவைகளைவைத்து என்ன செய்யவேண்டுமென்று இயேசு நமக்குச் சொல்லுகிறார்?



**பதில்:** “தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்” –மத்தேயு 7:7. இயேசு ஆறு குறிப்படையாளங்களை உங்களுக்குக் கொடுத்து, “போய் என் சபையை கண்டுபிடி” என்று நம்மிடம் செல்லுகிறார். பரலோக காரியங்களை தேடுகிறவர்கள் அவைகளைக் கண்டடைவார்கள் என்று அவர் வாக்குக்கொடுக்கிறார்.

## 12 எத்தனை சபைகள் இந்த ஆறு குறிப்படையாளங்களில் பொருந்துகின்றன?



**பதில்:** ஒரே ஒரு சபைக்கு மாத்திரமே பொருந்துகிற மிகவும் குறிப்பான அடையாளங்களை இயேசு கொடுத்தார். "என்னுடைய சபையில் அநேக நல்ல மனிதர்கள் இருப்பார்கள்" என்றோ, "அதில் சில மாய்மாலக்காரர்களும் இருப்பார்கள்" என்றோ மேலோட்டமான குறிப்புகளை இயேசு கொடுக்கவில்லை. இந்த இரண்டு குறிப்புகளுக்குள் எத்தனை சபைகள் பொருந்தக்கூடும்? அனைத்து சபைகளுமே பொருந்தும்! இந்த இரண்டு குறிப்புகளும் பட்டணத்தின் கடைவீதியில் இருக்கிற மளிகைக் கடைக்கும் கேளிக்கை விடுதிக்கும்கூட பொருந்தும். இவ்விதம் எல்லாவற்றிற்கும் பொருந்துவதால் அவைகள் பொருளற்றதாயுமிருக்கும். அவ்விதமில்லாது, ஒரு சபைக்கு, ஒரே ஒரு சபைக்கு—ஏழாம்நாள் அட்வெந்து சபைக்குப்—பொருந்துகிற குறிப்பான உயர்ந்த உன்னத வர்ணனையை இயேசு கொடுக்கிறார். குறிப்படையாளங்களை மீண்டும் ஒத்துப்பார்ப்போம்.

### ஏழாம்நாள் அட்வெந்து திருச்சபை



1. கி.பி. 538 க்கும் 1798க்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகாரப்பூர்வ அமைப்பாக இல்லை.
2. 1798 க்குப்பின்னர் எழுந்தது. அதன் துவக்கம் 1840 க்குப்பின் இருந்தது.
3. நான்காம் கற்பனையான தேவனுடைய பரிசுத்த ஏழாம்நாள் ஓய்வுநாள் உட்பட தேவனுடைய பத்துக் கற்பனைகளையும் அது கைக்கொள்ளுகிறது.
4. தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருக்கிறது.
5. உலகத்தின் 236 நாடுகளில் 208 நாடுகளில் ஊழியம் செய்கிற உலகளாவிய சபை அது.
6. வெளி. 14:6–14 வரையிலான இயேசுவின் மாபெரும் முத்தூதின் செய்தியை போதித்து பிரசங்கிக்கிறது.

இந்த ஆறு குறிப்படையாளங்களையும் நீங்களே பொருத்திப்பார்க்கவேண்டும் என்று இயேசு உங்களை அழைக்கிறார். இது எளிமையானது, இதில் தவறு செய்யமுடியாது.

குறிப்பு: இந்தக் குறிப்புகள் பொருந்தாத சபைகளில் அநேக அன்பான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். தேவன் தமது மக்களை வரும்படியாக இன்றைக்கு அழைக்கிற அவருடைய கடைசிகால மீதமான சபையாக அந்த சபைகள் இருக்கமுடியாது.

## 13 இயேசுவின் அன்பான எச்சரிப்பின் அழைப்பை அவருடைய பிள்ளைகள் கேட்டு பாபிலோனைவிட்டு வெளியே வரும்போது (வெளி. 18:2,4) அடுத்து என்ன செய்யவேண்டுமென்று இயேசு அவர்களிடம் கூறுகிறார்?

**"நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்;"—கொலோசெயர் 3:15; "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்;"—கொலோசெயர் 1:18.**

**பதில்:** தேவனுடைய மக்கள் ஒரே சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் வரும்படி அழைக்கப்படுவதாக வேதாகமம் கூறுகிறது. பாபிலோனைவிட்டு வெளியே வருகிறவர்களை கிறிஸ்து தலையாயிருக்கிற மீதமான சபைக்குள் வரும்படி இயேசு கூறுகிறார். "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு;" (யோவான் 10:16) என்று இயேசு கூறினார். அவர்களை "என் ஜனங்கள்" என்று பழைய ஏற்பாட்டிலும் (ஏசாயா 58:1) புதிய ஏற்பாட்டிலும் (வெளி. 18:4) அவர் அழைக்கிறார். தம்முடைய மந்தைக்கு (சபைக்கு) வெளியே இருக்கிற ஆடுகளைக் குறித்து: "அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என்

சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.” “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. ... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது” (யோவான் 10:16,27) என்று அவர் கூறுகிறார்.



## 14 எவ்விதம் ஒருவர் அந்த சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் நுழையமுடியும்?

**“எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு”—1 கொரி. 12:13.**

**பதில்:** ஞானமுழுக்கின் வழியாக நாம் தேவனுடைய கடைசிகால மீதமான சபைக்குள் நுழைகிறோம். (ஞானமுழுக்கைக் குறித்த விளக்கத்திற்கு பாடம் 9ஐ பார்க்கவும்).

## 15 ஒரே ஒரு மீதமான சபைக்குள்தான் தேவன் தமது மக்களை வரும்படியாக அழைக்கிறார் என்பதற்கு வேதாகமம் வேறு சான்றுகளைக் கொடுத்திருக்கிறதா?

**பதில்:** ஆம் கொடுத்திருக்கிறது. அவைகளைப் பார்ப்போம்.

அ. ஒரேஒரு சரீரம் —சபைதான் இருக்கிறது என்கிறது வேதாகமம் (எபே. 4:4; கொலோ. 1:18).

ஆ. நம்முடைய நாட்கள் நோவாவின் நாட்களைப் போன்றது என்று (லூக்கா 17:26,27) வேதாகமம் சொல்லுகிறது. நோவாவின் காலத்தில் தப்பிப்பதற்கு எத்தனை வழிகள் இருந்தன? பேழை என்கிற ஒரேஒரு வழிதான் இருந்தது. தமது பரலோக இராஜ்யத்திற்கு தமது மக்களை பத்திரமாக எடுத்துவருகிற ஒரேஒரு பேழையை அல்லது சபையைதான் இன்றைக்கு தேவன் மீண்டும் ஏற்பாடு செய்திருக்கிறார். சரியான பேழைக்குள் பிரவேசிப்பதில் எச்சரிக்கையாயிருங்கள். “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்” (அப். 2:47) என்று வேதாகமம் சொல்லுகிறது. அப்போஸ்தலர் காலத்தில் இது உண்மையாயிருந்தது. இன்றைக்கும் இது உண்மையாகவே இருக்கிறது.



## 16 தேவனுடைய மீதமான சபையைக்குறித்த நற்செய்தி என்ன?

**பதில்:**

அ. இயேசுவின்மேல் வைக்கும் விசுவாசத்தினால் மாத்திரமே நீதி என்கிற “நித்திய சுவிசேஷமே” அதனுடைய மைய நோக்கம் (வெளி. 14:6).

ஆ. அது கன்மலையாகிய இயேசுவின்மேல் கட்டப்பட்டிருக்கிறது (1 கொரி. 3:11; 10:4). “பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை”—மத். 16:18.

இ. இயேசு தமது சபைக்காக மரித்தார் (எபே. 5:25).

ஈ. எளிதாக அடையாளம் காணும்படியாக இயேசு தமது மீதமான சபையை தெளிவாக விவரிக்கிறார். அதேபோல, விழுந்துபோன சபைகளையும் அவர் விவரித்து, தமது மக்களை அவைகளிலிருந்து வெளியே வரும்படி அழைக்கிறார். தங்கள் கண்களையும் இருதயங்களையும் மூடிக்கொள்ளுகிறவர்களை மாத்திரமே சாத்தான் கண்ணியில் பிடிக்கமுடியும்.

உ. அதனுடைய போதனைகள் அனைத்தும் உண்மையானவை. (1 தீமோத்தேயு 3:15).

## 17 தேவனுடைய மீதமான மக்களைக்குறித்த நற்செய்தி என்ன?



**பதில்:** அவர்கள்

அ. பரலோக இராஜ்யத்திற்குள் இரட்சிக்கப்படுவார்கள் (வெளி. 15:2).
ஆ. இயேசுவின் வல்லமையினாலும் இரத்தத்தினாலும் பிசாசை ஜெயிப்பார்கள் (வெளி. 12:10,11).
இ. பொறுமையாயிருப்பார்கள் (வெளி. 14:12).
ஈ. இயேசுவின் விசுவாசத்தைப் பெற்றிருப்பார்கள் (வெளி. 14:12).
உ. மகிமையான சுதந்திரத்தை கண்டடைவார்கள் (யோவான் 8:31,32).

## 18 இவ்வுலகத்தின் காலம் மிகவும் தாமதப்பட்டிருக்கிறது. இயேசுவின் முத்தூது செய்தியை கொடுத்துமுடித்தவுடனே இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும் (வெளி. 14:6–14). தம்முடைய மக்களுக்கான இயேசுவின் அவசர மன்றாட்டு என்ன?

**“நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்”–ஆதியாகமம் 7:1.**



**பதில்:** நோவாவின் காலத்தில் (நோவா உட்பட) எட்டுப்பேர் மாத்திரமே தேவனுடைய அழைப்பிற்கு செவிகொடுத்தார்கள். இயேசு தமது முடிவுகால பேழையின் அல்லது சபையின் கதவருகே உங்களுக்காக காத்திருக்கிறார்.

குறிப்பு: வெளி. 14:6–14 வரையிலான முத்தூதைக்குறித்த சிலிர்ப்பூட்டும் செய்திகளின் வரிசையில் இது எட்டாவது பாடம். முடிவான பாடம் தீர்க்கதரிசன வரத்தை விவரிக்கும்.

## 19 தேவனுடைய முடிவுகால மீதமான சபையின் பாதுகாப்பிற்குள் வரும்படி அழைக்கிற இயேசுவுக்கு செவிகொடுக்க நீ விரும்புகிறாயா?

**உங்கள் பதில் :** ____________

# சிந்தனைக் கேள்விகள்

1. உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பங்கை பெற்றிருக்கும் சீனாவிற்குள் சத்தியம் குறைவாகவே நுழைந்திருக்கிறது. அங்கிருக்கும் ஒவ்வொருவரையும் சென்றடைய அதிக காலம் எடுக்குமல்லவா?

**பதில்:** "மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்"—மாற்கு 10:27; "அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" (ரோமர் 9:28) என்று வேதாகமம் சொல்லுகிறது. நாற்பது நாட்களுக்குள் நினிவே பட்டணம் முழுவதையும் மனந்திரும்புதலுக்கு அழைத்துவரும்படி யோனாவை பலப்படுத்தின அதே தேவன் (யோனா 3), இந்த கடைசி நாட்களிலும் தமது வேலையை விரைவாக முடிப்பார். உள்ளே வரும் ஆத்துமாக்களை கொள்ளக்கூடாமல் போகுமளவு அதி வேகத்தில் தமது வேலை நிறைவேறும் என்று அவர் கூறுகிறார் (ஆமோஸ் 9:13). தேவன் அதை வாக்குக்கொடுத்திருக்கிறார். அது சம்பவிக்கும்! விரைவாகவும் சடிதியாகவும் அது நிறைவேற்றப்படும். தேவனுடைய ஊழியத்தைக்குறித்த நீண்டகால எண்ணங்களும் திட்டங்களும் குறிப்பை இழக்கின்றன. இது மிகவும் அவசரமான நேரம். இந்த அவசரம் உடனடி செயலை கோருகிறது. நீண்டகாலம் யோசித்திருக்கிறவர்கள் கண்ணியில் அகப்படக்கூடும். விழித்தெழுவதற்குத் தாமதமாகிவிடக்கூடும்.

2. இயேசு திரும்ப வரும்போது கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிற அநேகர் ஆயத்தமில்லாதிருந்து இரட்சிப்பை இழந்துபோவார்கள் என்கிற பயங்கர ஆபத்து உண்மையிலேயே இருக்கிறதா?

**பதில்:** ஆமாம். இயேசு அதை தெள்ளத்தெளிவாக்கியிருக்கிறார். 1. பெருந்திண்டி, 2. வெறி, 3. லவுகீக கவலை. 4. உறக்கம் (லூக்கா 21:34; மாற்கு 13:34–36) போன்ற கிறிஸ்தவர்களை கண்ணிக்குட்படுத்தி அழித்துவிடும் காரியங்களைக்குறித்து அவர் எச்சரித்திருக்கிறார்.

அ. **பெருந்திண்டி** என்றால் உண்பதிலாகட்டும், உழைப்பதிலாகட்டும், படிப்பதிலாகட்டும், பொழுதுபோக்குவதிலாகட்டும், எதிலும் அதிகமாயிருப்பது! அது நிதானத்தைப் பாதித்து தெளிவான சிந்தனையை அழித்துவிடுகிறது. இயேசுவோடு நேரம் செலவுசெய்வதையும் இது தடைசெய்கிறது.

ஆ. **வெறி.** ஆபாசம், சட்டவிரோத பாலியல், தீய தோழமைகள்மேல் ஒரு மயக்கத்தைக் கொடுத்து, வேத தியானம், ஜெபம், சபை ஆராதனை போன்ற பரலோக காரியங்களின்மேல் விருப்பமின்மையை ஏற்படுத்துபவைகளை இது குறிக்கிறது. இது மக்களை கற்பனை உலகத்திற்குள் வசிக்கும்படி நடத்தி இவ்விதமாக இரட்சிப்பை இழக்கச் செய்கிறது.

இ. **உலக கவலைகள்.** முற்றிலும் நல்ல காரியங்களைச் செய்வதில் அதிக நேரம்செலவுசெய்வதால், இயேசுவுக்கான நேரம், ஜெபம், வேதவாசிப்பு, சாட்சி பகிருதல், சபை ஆராதனைகளில் கலந்துகொள்ளுதல் போன்றவற்றிற்கு நேரம் இல்லாமற்போகச் செய்கிறவைகளை குறிக்கிறது. இது கிறிஸ்தவர்களை ஓய்வற்றவர்களாக்கி அழித்துவிடுகிறது. இவ்விதம் செய்வதினால் மெய்யான நோக்கத்திலிருந்து நம் கண்களை அப்புறப்படுத்தி, முக்கியமற்ற காரியங்களில் மூழ்கிவிடுகிறோம்.



ஈ. **தூக்கம்.** இது ஆவிக்குரிய தூக்கத்தைக் குறிக்கிறது. இன்றைக்கு இதுவே மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கலாம். ஒரு நபர் தூங்கும்போது தான் தூங்குவதை அறிவதில்லை. இயேசுவுடனான நம் உறவை சாதகமாக்கி, வல்லமையில்லாத தேவபக்தியின் வேஷத்தை வைத்துக்கொண்டு, மாபெரும் பிரசங்கங்களை மற்றவர்களுக்குப் பொருத்தி, இயேசுவின் ஊழியத்தில் மிகவும் சுறுசுறுப்பாக நுழைய மறுப்பது—இவைகளும் இன்னும் பல காரியங்களும் தூக்கத்தில் வைக்கிறது. அற்புதமாக எழுப்பப்படாவிடில் காலம் கடந்துபோகும் வரையிலும் உறக்கத்திலேயே இருந்துவிடுவார்கள்.

## 3. நான் தேவனுடைய மீதமான சபையில் சேர்ந்துவிட்டேன். இதைப்போல நான் ஒருபோதும் மகிழ்ச்சியாயிருந்ததில்லை. ஆயினும், இப்போதைப் போன்று முன்னர் பிசாசினால் அலை கழிக்கப்பட்டதில்லை. ஏன் இவ்விதம்?

**பதில்:** ஏனெனில் பிசாசு தேவனுடைய மீதமான மக்கள்மேல் கோபமாயிருந்து, அவர்களைக் காயப்படுத்தி சோர்வடையச் செய்வதற்கு தன் நேரத்தை செலவழிக்கிறான் (வெளி. 12:17). தமது மக்கள் உபத்திரவப்படமாட்டார்கள் என்றோ, பிசாசினால் அலைகழிக்கப்படமாட்டார்கள் என்றோ, கடினமான காலங்களைச் சந்திக்கமாட்டார்களென்றோ, சாத்தானால் பலமாக தாக்கப்படமாட்டார்கள் என்றோ, அவர்களுக்கு ஆபத்து இருக்காது என்றோ இயேசு வாக்குக்கொடுக்கவில்லை. சொல்லப்போனால் இப்படிப்பட்ட காரியங்கள் தமது மக்களுக்கு நேரிடும் என்றே அவர் கூறியிருக்கிறார் (2 தீமோத்தேயு 3:12). எனினும் 1. தமது மக்களுக்கு வெற்றிதருவதாகவும் (1 கொரிந்தியர் 15:57), 2. தமது மக்கள் சந்திக்கிற அனைத்திலும் அவர்களோடு இருப்பதாகவும் (மத்தேயு 28:20), 3. அவர்களுக்கு சமாதானத்தை அளிப்பதாகவும் (யோவான் 16:33; சங்கீதம் 119:165), 4. அவர்களை ஒருபோதும் கைவிடாதிருப்பதாகவும் (எபிரெயர் 13:5) மகிமையான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். முடிவாக, தமது கைகளிலிருந்து எவரும் அவர்களைப் பறித்துவிடாதபடி அவர்களை நெருக்கமாக வைத்துக்கொள்ளுவதாக இயேசுவும் அவரது பிதாவும் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள் (யோவான் 10:28,29). ஆமென்.

## 5. சபை என்கிற வார்த்தையின் பொருள் என்ன?

**பதில்:** சபை என்கிற வார்த்தை “வெளியே அழைக்கப்பட்டவர்கள்” என்று பொருள்படக்கூடிய “எக்லிசியா” என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பொருத்தமான வார்த்தை! தேவனுடைய பிள்ளைகள் உலகத்திலிருந்தும் பாபிலோனிலிருந்தும் விலைமதிப்புமிக்க பாதுகாப்பின் மந்தைக்குள் வரும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு அழைக்கும்போது ஞானமுழுக்கு எடுப்பதன்வழியாக மக்கள் இயேசுவின் மீதமான கடைசிகால சபையில் ஒரு பங்காகிறார்கள். “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது” (யோவான் 10:27) என்று இயேசு கூறுகிறார்.

உங்கள் கருத்துக்கள் மற்றும் கேள்விகளை இங்கே எழுதவும்.




15




16




17



18




19




20



21




22




23



24




25




26




27

## இது 27 பாடங்கள்கொண்ட வரிசையில் ஒன்று!

**ஒவ்வொரு வேதபாடமும் உங்களிலும் உங்கள் குடும்பத்திலும் செல்வாக்கை ஏற்படுத்தும் ஆச்சரியமான உண்மைகளைக் கொண்டுள்ளது. ஒன்றையும் தவறவிட்டுவிடாதீர்கள்!**

**வேதபாடம் 15:** – அந்திகிறிஸ்து யார்?
**வேதபாடம் 16:** – விண்வெளியிலிருந்து தூதனின் செய்திகள்!
**வேதபாடம் 17:** – தேவன் வரைந்த திட்டம்!
**வேதபாடம் 18:** – சரியான நேரத்தில் தீர்க்கதரிசன நியமங்கள் வெளிப்பட்டன!
**வேதபாடம் 19:** – இறுதி தீர்ப்பு!
**வேதபாடம் 20:** – மிருகத்தின் முத்திரை!
**வேதபாடம் 21:** – வேதாகம தீர்க்கதரிசனத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்!
**வேதபாடம் 22:** – மற்றொரு பெண்!
**வேதபாடம் 23:** – கிறிஸ்துவின் மணவாட்டி!
**வேதபாடம் 24:** – சோதிடர்களையும் மனம்சார்ந்த சக்திகள் கொண்டவர்களையும் தேவன் ஏவுகிறாரா?
**வேதபாடம் 25:** – நாங்கள் தேவனை நம்புகிறோம்!
**வேதபாடம் 26:** – மாற்றும் அன்பு!
**வேதபாடம் 27:** – திரும்ப முடியாது!

# கேள்விகள் 23

**இந்தத் தகவல் படிவத்தை நிரப்புவதற்கு முன், இந்தப் பாடத்தைப் படிக்கவும். அனைத்து பதில்களையும் வேதப்பாட புத்தகத்தில் கண்டறியலாம்.(√) எண்களை அடைப்புக்குறிக்குள் எழுதவும் (1). சரியான விடைக்கான எண்ணைக் குறிப்பிடவும். இந்தப் படிவத்தை நிரப்புவதற்கு (அடோப் ரீடரைப்)" பயன்படுத்தவும்.**

1. இயேசு எவ்விதம் தமது மெய்யான சபையை தீர்க்கதரிசனத்தில் அடையாளப்படுத்துகிறார்? (1)

- ☐ ஒரு உயரமான சிகரமாக.
- ☐ ஒரு மிருகமாக.
- ☐ ஒரு பிரகாசமான தூதனாக.
- ☐ ஒரு தூய்மையான பெண்ணாக.
- ☐ ஒரு மர்மமான மேகமாக.

2. சபை ஓடிச்சென்ற "வனாந்தரம்" என்ன? (1)

- ☐ குகைகளையும் காடுகளையும் கொண்ட தனிமையான இடங்கள்.
- ☐ சகாரா பாலைவனம்.
- ☐ ஈராக்.
- ☐ கோபி பாலைவனம்.

3. முத்தூது செய்தி உள்ளடக்குபவை: (3)

- ☐ பாபிலோன் விழுந்தது, அவளைவிட்டு வெளியே வா.
- ☐ நரகம் நித்தியநித்தியமாக எரியும்.
- ☐ தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடந்துகொண்டிருக்கிறது. பயபக்தியோடும் துதியோடும், தேவனுடைய அடையாளமாகிய அவருடைய பரிசுத்த ஏழாம்நாள் ஓய்வை ஆசரித்து அவரை சிருஷ்டிகராக தொழுதுகொள்ளுங்கள்.
- ☐ வாதைகள் முடிந்துவிட்டன.
- ☐ அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்.
- ☐ மிருகத்தை வணங்கி அதன் முத்திரையை பெறவேண்டாம்.

4. தமது மீதமான சபைக்குள் நம்மை நடத்தும்படி இயேசு ஆறு குறிப்படையாளங்களைக் கொடுக்கிறார். அந்த சபை: (6)

- ☐ அநேக நல்ல கிறிஸ்தவர்களைக் கொண்டிருக்கும்.
- ☐ ஓய்வுநாள் உட்பட பத்துக்கற்பனைகளையும் அது கைக்கொள்ளும்.
- ☐ சில மாய்மாலக்காரர்களைக் கொண்டிருக்கும்.
- ☐ மாபெரும் கிறிஸ்தவ பாடல்களை பாடி மகிழும்.
- ☐ அதிகம் ஜெபிக்கும்.
- ☐ கிபி.538–1798வரை அதிகாரப்பூர்வ அமைப்பாக அது இருந்திருக்காது.
- ☐ தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருக்கும்.
- ☐ அந்நிய பாஷை பேசும்.
- ☐ உலகளாவிய ஊழிய சபையாக இருக்கும்.
- ☐ அநேக அருமையான சபை கட்டிடங்களைப் பெற்றிருக்கும்.
- ☐ 1798க்குப்பின்பு எழும்பி தன் வேலையைச் செய்யும்.
- ☐ வெளி. 14:6–14ன் முத்தூதுச் செய்திகளை உபதேசிக்கும்.

5. சபை எவ்வளவு வருடங்கள் வனாந்தரத்தில் இருக்கவேண்டும்? (1)

- ☐ 5 வருடம்
- ☐ 1000 வருடம்
- ☐ 680 வருடம்
- ☐ 1260 வருடம்
- ☐ 33 வருடம்

6. முதல் நெடுவரிசையில் ஒவ்வொரு அடையாள வார்த்தைக்கும் முன் உள்ள எழுத்தை அவ்வார்த்தையின் அர்த்தத்தை குறிக்கும் சொல்லுக்கு முன்பாக எழுதவும். (கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டை பார்க்கவும்).

| **அடையாளம்** | | **அர்த்தம்** |
|---|---|---|
| A. பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடம் | A. | இறுதியாக மிஞ்சிய பங்கு |
| B. ஸ்திரீயின் பாதத்தின் கீழ் உள்ள சந்திரன் | A. | இயேசு |
| C. சிவப்பான பெரிய வலுசர்ப்பம் | __A__ | 12 சீஷர்கள் |
| D. மீதமானவர்கள் | A. | சபை |
| E. ஸ்திரீ | A. | பழைய ஏற்பாட்டின் பலிமுறைகள் |
| F. சூரியன் | A. | அஞ்ஞான ரோம மூலம் சாத்தானின் கிரியைசெய்தல் |
| G. ஸ்திரீக்குப் பிறந்த பிள்ளை | A. | இயேசுவும் அவருடைய நீதியும் |

7. இயேசு தமது மக்களை உலகத்திலிருந்தும் பாபிலோனிலிருந்தும் தமது மீதமான சபைக்குள் வரும்படி அழைக்கிறாரா? (1)

- ☐ ஆம்.
- ☐ இல்லை.

8. எவ்விதம் ஒருவர் மீதமான சபையில் சேரமுடியும்? (1)

- ☐ போதகரின் கைகளை குலுக்குவதின் வழியாக.

அடுத்தப் பக்கம் தொடருகிறது

- உறுப்பினர் அட்டையில் கையெழுத்திடுவதின் வழியாக.
- ஞானமுழுக்கின் வழியாக.
- மிகப்பெரும் தொகையை கொடையாகத் தருவதன் வழியாக.

9. அனைத்து சபைகளிலும் மிகவும் நேர்த்தியான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். சிலர் அவைகளில் அங்கத்தினராகாமலும்கூட இருக்கிறார்கள். (1)

- ஆம். - இல்லை.

10. கிறிஸ்தவர்களை ஆச்சரியப்படும்விதமாக இரட்சிப்பை இழக்கச் செய்பவை: (4)

- வெறி.
- உலகக் கவலை.
- உங்கள் மதத்தைக் குறித்த அதிக பரபரப்பு.
- ஆவிக்குரிய குடிபோதை.
- ஆவிக்குரிய உறக்கம்.
- உண்மையான சாட்சி பகருதல்.
- செய்தித்தாளை வாசிப்பது.

11. தமது சுவிசேஷத்தை ஒவ்வொரு சிருஷ்டிக்கும் விரைவாக எடுத்துச் செல்வதன்மூலம் தேவன் தம் வேலையை துரிதமாக முடிப்பார். (1)

- ஆம். - இல்லை.

12. தேவன் தமது பிள்ளைகளுக்குக்கொடுக்கும் வாக்குத்தத்தங்கள்: (4)

- சமாதானம்.
- அவர்களுக்குப் பிரச்சனையே இருக்காது.
- வெற்றி.
- அவர்கள் சுகவீனப்படமாட்டார்கள்.
- பிதாவின் கைகளிலிருந்தும் இயேசுவின் கரங்களிலிருந்தும் அவர்களை ஒருபோதும் பறிக்க முடியாது.
- அவர் அவர்களைக் கைவிடமாட்டார்.
- அவர்கள் ஐசுவரியவான்களாயிருப்பார்கள்.

13. சபை என்பதன் பொருள்: (1)

- ஆராதனைக்காக முறையாக ஒதுக்கப்பட்ட இடம்.
- விசுவாசிகளின் கூட்டம்.
- வெளியே அழைக்கப்பட்டவர்கள்.
- ஆலயம்.

14. தேவனுடைய கடைசிகால மீதமான சபையில் நான் ஒரு அங்கமாயிருக்க விரும்புகிறேன்.

- ஆம். - இல்லை.

**வேதபாடம்: 23 அனைத்து கேள்விகளுக்கும் தவறாமல் பதில் அளிக்கவும்.**

AMAZING FACTS India

உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்ணைக் குறிப்பிடவும்.

உங்களுக்கான அடுத்த “இலவச” வேதபாட புத்தகத்தைப் பெறுவதற்கு “சமர்ப்பி” பட்டனை அழுத்தவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் : | | | | | |
| மின்னஞ்சல் முகவரி : | | | | | |
| அலைபேசி எண் : | | | | | |
| முகவரி : | | | | | |
| நகரம், மாவட்டம் : | | மாநிலம் | | தேசம் | India |
| அஞ்சல் குறியீடு : | | வயது | | பாலினம் | |

சமர்ப்பி

உங்கள் முகவரி


Study Guide 23 • **The Bride of Christ**
www.AmazingFacts.org • www.AmazingFactsIndia.org • TamilBibleSchool@AFTV.in
© 2020 Amazing Facts India • All Rights Reserved • Printed in India • +91 9169164480